மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 295. டாக்டர்.அ. ஸ்ரீதரன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

295—

வால்பாறை தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

*11575—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலுள்ள தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறையில் உள்ள அனைத்து தேயிலைத் தோட்ட நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினரால், 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதி 11-ல் குறிப்பிட்டவாறு சுகாதார அதிகாரியிடமிருந்து குடிநீர் பற்றிய தகுதிச் சான்று பெறப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Under Section 8 of the Tamil Fadu Labour (Pl nt tion) Act and Section 7(2) (ll) of the Tamil Nacu Labour (Plantation) Rules பிரகாரம் அங்கே குடிதண்ணீர் வழங்கப்படவேண்டும். ஆனால் பல்வேறு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் என்னிடம் புகார் கொடுத்தார்கள். நானும் அந்த பிளான்டேஷன் லேபர் இன்ஸ்பெக்டரை அழைத்து அங்கேயுள்ள கிணறுகளையும், தண்ணீர் தொட்டிகளையும் பார்வையிடுகிறபோது Fertilizer சம்பந்தப்பட்ட அசுத்தங்கள் அந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குடிதண்ணீரில் கலந்திருக்கிறது. நானும் அந்த லேபர் இன்ஸ்பெக்டரிடம் சொல்லி, உரிய அதிகாரிகளிடம் தெரியப் படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுங்கள் என்று சொல்லியிருந்தேன். ஆனால் அந்த பிளான்டேஷன் லேபர் இன்ஸ்பெக்டருக்கு இப்போது இருக்கிற சட்டத்தின் பிரகாரம் முழுமையாக அப்படி தவறுகள் செய்பவர்கள்மீது நடவடிக்கையெடுக்க சில சிக்கல்கள் இருப்பதாக எனக்கு தெரிவிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதிலே சிறப்பு ஆய்வு செய்து அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாக்கப் பட்ட குடிதண்ணீர் வழங்க உரிய ஆணை பிறப்பிப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களைத் தந்தால் அதற்கு உரிய நடவடிக்கையெடுக்க இந்த அரசு பரிசீலிக்கும். அங்கேயிருக்கிற அனைத்து தொழிலாளர்களுக்கும் பாது காக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்குவதற்காக அங்கே தகுதி சான்றிதழ் பெற்றுதான் வழங்கப்பட்டு வருகிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது. அதிலே ஏதும் குறைகள் இருந்தால் அதுகுறித்தும் நடவடிக்கையெடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் அ. ஸ்ரீதரன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தேயிலை தோட்டத்தில் மட்டுமல்ல. பல்வேறு இடங்களில் இதுபோன்ற குறை பாடுகள் இருக்கின்றன. நானும் அதிகாரிகளிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர்களால் நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு சரிசெய்வதற்கான வாய்ப்புகள், அதற்கான அதிகாரங்கள் அவர்களுக்கு இல்லையென்று சொல்வதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விதிக்கு அமெண்ட்மென்ட் செய்ய வழிவகை இருக்கிறதா என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சே. ரகுபதி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் **296**, திரு. ஆர். சிங்காரம் இருக்கையில் இல்லை. திரு. து. மூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.